




# நேருவும் குழந்தைகளும்


குழந்தைக் கவிஞர்: அழ.வள்ளிய.




## PHOTO CREDITS

**Our thanks are due to :**

- ★ Press Information Bureau, Government of India, New Delhi
- ★ Public Information & Publicity Department, Government of Madras
- ★ Department of Information & Public Relation, Government of Andhra Pradesh, Hyderabad - Dt.
- ★ Director of Public Relation, Trivandrum
- ★ United States Information Service, New Delhi
- ★ United Nations International Children's Education Fund, New Delhi
- ★ Information Department of U. S. S. R. New Delhi
- ★ Embassy for Japan, New Delhi
- ★ Indian Council for Child Welfare, New Delhi
- ★ Shankar's Weekly, New Delhi
- ★ Punjab Photo Service, New Delhi
- ★ All India Press Photo Agency, Madras
- ★ Sahitya Akademi, New Delhi
- ★ Dr. Prabakar Machwe
- ★ Mr. K. S. Ramanujam, Madras
- ★ Mr. R. Krishnan, Madras
- ★ Mrs. Lakshmi Krishnamurthy, Madras
- ★ Mr. T. K. Shanmugam, Madras





## [illegible]

ஒருவருக்கு வயது எழுபது.

அவரை நாம் எப்படி அழைப்போம்?

தாத்தா என்று அழைப்போம்.

ஆனால், எழுபது வயதைக் கடந்த பிறகும் நேருவை நாம் எப்படி அழைத்தோம்?

'தாத்தா' என்று? இல்லை.

'மாமா' என்றுதான் அழைத்தோம். 'நேரு மாமா. நேரு மாமா' என்று ஆசையோடு கூறினோம். இதற்குக் காரணம் என்ன?

அவர் எப்போதும் இளைஞரைப் போலவே இருப்பார். நிமிர்ந்து நடப்பார். சுறுசுறுப்பாக இருப்பார். குழந்தைகளோடு குழந்தையாக ஓடி ஆடி விளையாடுவார். சிரித்துப் பேசி மகிழுவார். என்றும் உற்சாகமாக இருப்பார்.

அவருடைய உள்ளம் குழந்தை உள்ளம். ஆதனால்தான் அவர் 74-வது வயதிலும் இளைஞராக இருந்தார்.

குழந்தைகள் என்றால் நேருவுக்குக் கொள்ளை ஆசை. குழந்தைகளுக்கும் நேரு மாமா என்றால் அளவில்லாத பிரியம்.

## [illegible]


நேரு 1889-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் தேதி அலகாபாத்தில் பிறந்தார். அவர் பிறந்த நாளை, குழந்தைகள் தினமாக நாடு முழுவதும் கொண்டாடுகிறோம். அன்று, நீங்கள் ஆடுகிறீர்கள்; பாடுகிறீர்கள்; அணிவகுத்துச் செல்கிறீர்கள்; கூட்டம் போட்டுப் பேசுகிறீர்கள்; 'நேரு



பொட்டு வைக்குது ஒரு குழந்தை




தொட்டுக் கொடுக்குது ஒரு குழந்தை



மாமா வாழ்க!' என்று வாழ்த்துகிறீர்கள். சில இடங்களில் குழந்தைகளுக்குப் பால் வழங்குகிறார்கள்; இனிப்புக் கொடுக்கிறார்கள். இன்னும் குழந்தைகளுக்கு வேண்டிய பல நல்ல காரியங்களைச் செய்கிறார்கள். இப்படி நாடு முழுவதும் விழாக்கள் நடக்கின்றன.

நேரு குழந்தையாக இருந்தபோது ஆண்டுதோறும் நவம்பர் 14-ஆம் தேதியை அவருடைய வீட்டில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.



அந்த விழாவில் அவர்தாம் கதாநாயகன். அன்று விடியற்காலையில் ஒரு பெரிய தராசின் ஒரு தட்டிலே நேருவை உட்கார வைப்பார்கள். மற்றொரு தட்டில், அவரது எடை அளவு கோதுமை முதலிய தானியங்களை வைத்து நிறுப்பார்கள். பிறகு, அந்தத் தானியங்களை ஏழைகளுக்குக் கொடுப்பார்கள். அன்று அவருக்குப் புதுப்புது ஆடைகள் உடுத்தி அழகு பார்ப்பார்கள். உறவினரெல்லாம் வீட்டுக்கு வருவார்கள். ஏராளமான பரிசுகள் கொடுப்பார்கள். பகல் விருந்து பலமாயிருக்கும். அன்று முழுவதும் அவருக்கு ஒரே குதூகலந்தான்.

இரவு தூங்கப் போகும்போது, "ஐயோ, இந்த விழா ஆண்டுக்கு ஒரு முறைதானே வருகிறது? அடிக்கடி வரக்கூடாதா?" என்று அவர் வருந்துவாராம்.


சிறுவராயிருந்தபோது, அவருடைய வீட்டிலே, உறவினர்களெல்லோரும் சேர்ந்து அவரது பிறந்த நாளைக் கொண்டாடினார்கள். நாள் ஆக ஆக, அவருக்கு இந்த நாடே வீடாகியது. நாட்டு மக்கள் எல்லோருமே உறவினர்கள் ஆனார்கள். அப்புறமும், வீட்டுக்குள்ளேயே அவரது பிறந்த



மாலை போடுது
ஒரு குழந்தை



வழியைக் காட்டுது
ஒரு குழந்தை



நாளைக் கொண்டாட முடியுமா? நாடு முழுவதும் கொண்டாட வேண்டுமென்று மக்கள் விரும்பினார்கள்.

நேரு இதை விரும்பவில்லை. ஆனால், மக்கள் சும்மா இருப்பார்களா? விடாமல் தொந்தரவு செய்தார்கள். கடைசியாக நேரு இசைந்துவிட்டார். "என் பிறந்த நாளைக் கொண்டாடுங்கள். ஆனால் அதைக் குழந்தைகள் தினமாகத்தான் கொண்டாட வேண்டும்" என்றார்.

1950-ஆம் ஆண்டு முதல் நேரு மாமாவின் பிறந்த நாள், குழந்தைகள் தினமாகத் தேசம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.



**நேருவைக் காணோம்!**

1957-ஆம் ஆண்டு மே மாதம். ஒரு நாள் மாலை நேரம். டில்லியிலுள்ள நேருவின் இல்லத்தில் ஒரே பரபரப்பு.

"நேருஜி எங்கே? நேருஜி எங்கே?"

"சற்று முன்பு இங்கு இருந்தாரே! எங்கே போயிருப்பார்?"

வீடு முழுவதும் தேடினார்கள். தோட்டத்திற்கு ஓடினார்கள். நேரு அருமையாக வளர்க்கும் அர்ஜுன் (புலிக்குட்டி), மது (நாய்) முதலியவற்றுடன் விளையாடிக் கொண்டிருக்கிறாரா என்று பார்த்தார்கள். எங்கும் அவர் அகப்படவில்லை.

அப்படியானால் எங்குதான் போயிருப்பார்?

ஒருவருக்குமே தெரியவில்லை. அங்கிருந்த காவலர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் விழித்தார்கள். பாதுகாப்பு அதிகாரிகள் பதறினார்கள். நேரு ஓர் இடத்திற்குப் போகிறார் என்றால், முன்னதாகவே எல்லாருக்கும் தெரியும். சொல்லாமல் கொள்ளாமல்




## குழந்தைகளுக்கு மாலை

தன் கழுத்தில் விழுந்த
மாலையைக் கழற்றிக்
குழந்தையின் கழுத்தில்
போடுவதில்தான்
நேருவுக்கு எவ்வளவு மகிழ்ச்சி!

வீட்டுக்கு வந்த சிறுமிக்கு
மலர் மாலையைப் போட்டு
மகிழ்ச்சி அடைகிறார்.

ரளத்தில் முஸ்லிம் சிறுமியின்
ழுத்தில் சரிகை மாலையைப்
பாட்டுத் தட்டிக் கொடுக்கிறார்.





திடீரென்று எந்த இடத்திற்கும் போகமாட்டார்.

உடனே, நாலா பக்கமும் ஆள் அனுப்பினார்கள். டெலிபோனில் பல இடங்களுக்கும் தகவல் கொடுத்தார்கள். டில்லி நகரையே இச்செய்தி ஒரு கலக்குக் கலக்கிவிட்டது.

ஆனால், அதே சமயம் நேரு மிகவும் ஆனந்தமாக ஓரிடத்தில் பொழுது போக்கிக்கொண்டிருந்தார். இது, அவர்களுக்கெல்லாம் தெரியாது! எங்கே?

சிறிது தூரத்திலுள்ள ஒரு பூங்காவிலே! குழந்தைகளோடு குழந்தையாக அவர் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர்களது ஆடல்களையும், பாடல்களையும் ரசித்துக்கொண்டே ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருந்தார். 'அரசாங்க அலுவல்களையும், அரசியல் தொல்லைகளையும் மறந்து கொஞ்ச நேரமாவது இருக்கலாமே!' என்றுதான் எவருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டு நழுவி வந்திருந்தார் நேரு!



## குல்லாய் மீது புறா!

டில்லியில் ஒரு பெரிய விளையாட்டு அரங்கம் இருக்கிறது. 'நேஷனல் ஸ்டேடியம்' என்று அதற்குப் பெயர். சில ஆண்டுகளுக்கு முன்பு அங்கு லட்சக்கணக்கான குழந்தைகள் கூடியிருந்தார்கள். எல்லோரும் 'நேரு மாமா எப்போது வருவார், எப்போது வருவார்?' என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நேருவின் தலை தெரிந்தது. அவ்வளவுதான்! 'சாச்சா நேரு - ஜிந்தா பாத்! சாச்சா நேரு - ஜிந்தா பாத்!' (நேரு மாமா - வாழ்க!) என்ற வாழ்த்தொலி



## கன்னம்
## தடவும்
## கைகள்

குழந்தைகளின்
பட்டுப் போன்ற கன்னங்களைத்
தொட்டுத் தடவிக் கொஞ்சுகிறார்.





மாலைப் பிணைந்தது.

நேரு அருகிலே வந்ததும், அவர் மீது பூமாரி பொழிந்தார்கள். ரோஜா மலரைக் காணிக்கையாக வழங்கினார்கள். மாலைகளும், செண்டுகளும் மலை மலையாகக் குவிந்தன.

நேரு குழந்தைகளையெல்லாம் மனமார வாழ்த்தினார். சிறிது நேரம் பேசினார். பிறகு, ஒரு வெள்ளைப் புறாவைப் பறக்கவிட்டார். 'உலகத்தில் யுத்தம் என்பதே கூடாது; எல்லோரும் சமாதானமாக வாழ வேண்டும்' என்பதுதான் நேருவின் கொள்கை. சமாதானத்திற்கு அறிகுறியாகத்தான் வெள்ளைப் புறாவை அவர் பறக்கவிட்டார்.

அந்தப் புறா 'விர் . ர் . ர் . .' என்று மேலே பறந்து சென்றது. வானத்திலே பல முறை வட்டமிட்டது. பிறகு, மெல்ல மெல்லக் கீழே இறங்கியது. அப்படி இறங்கி வந்த புறா, என்ன ஆச்சரியம், நேருவின் வெள்ளைக் குல்லாயின் மீது 'ஜம்' மென்று உட்கார்ந்துவிட்டது!




அப்போது, குழந்தைகளின் ஆரவாரத்துக்குக் கேட்க வேண்டுமா?

நேருவின் பிறந்த நாளாகிய நவம்பர் 14-ஆம் தேதிதான் இது நடந்தது.

**குழந்தைகள் கேட்ட கேள்விகள் !**

"நேரு மாமா, உங்களுக்கு ஆண் குழந்தைகளிடம் பிரியம் அதிகமா? பெண் குழந்தைகளிடம் பிரியம் அதிகமா ?"


"மாமா, நீங்கள் சிறையிலிருந்து உங்கள் மகளுக்குக் கடிதம் எழுதினீர்களே, அதற்குப் பிறகு நடந்த பெரிய மாறுதல்கள் என்ன, என்ன?"




## பிறந்த நாளில்

''நேரு மாமா வாழ்க!''
என்று டில்லி தேசிய
விளையாட்டு அரங்கில்
கூடியிருக்கும் குழந்தைகள்
குதூகலத்துடன் வாழ்த்துகிறார்கள்.

சமாதானத்தின் அறிகுறி
வெள்ளைப்புரு.
அதைப்
பிறந்த நாளில்
பறக்கவிடுகிறார் நேரு.






—இப்படிக் கேள்விமேல் கேள்வி போட ஆரம்பித்து விட்டார்கள் நேருவைப் பேட்டி கண்ட குழந்தைகள். நேரு சிரித்துக்கொண்டே அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் அளித்தார். அவருடைய பதில்களைக் கேட்டுக் குழந்தைகள் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார்கள்.

1957-ம் ஆண்டு, நேருவின் பிறந்த நாளில் நேருவின் மாளிகையில்தான் இந்தப் பேட்டி நடந்தது. அகில இந்திய வானொலி இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் குழந்தைகள் வந்து இதில் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட குழந்தைகளில், நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த கி. லட்சுமி என்ற சிறுமியும் இருந்தாள். அவள் என்ன கேள்வி கேட்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கே இருந்த தந்தத்தால் செய்த யானைப் பொம்மை அவள் கண்ணில் பட்டது. உடனே அவளுக்குக் கேள்வி தோன்றிவிட்டது.



“மாமா, நீங்கள் அயல் நாட்டுக்குத் தூதர்களை அனுப்புகிறீர்கள். குழந்தைகளுக்காக யானைகளையும் அனுப்புகிறீர்கள். குழந்தைகளாகிய எங்களையும் ஏன் அனுப்பக் கூடாது? நாங்கள் அந்த நாட்டுக் குழந்தைகளைச் சந்தித்து அவர்களிடம் நம்மைப் பற்றி கூறலாம்; அவர்களைப் பற்றியும் நாங்கள் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?” என்று கேட்டாள்.

நேருவுக்கு லட்சுமியின் கேள்வி மிகவும் பிடித்திருந்தது. “நல்ல யோசனை, நிச்சயம் கவனிக்கிறேன்” என்று பதில் கூறினார்.


அப்போது அந்தக் குழந்தைகளிடம், “நீங்கள்



''நேரு மாமா, உங்களுக்கு ஆண் குழந்தைகளிடம் பிரியம் அதிகமா? பெண் குழந்தைகளிடம் பிரியம் அதிகமா?'' என்று கேட்கிறார்கள் குழந்தைகள் — 1957ல் நேருவின் மாளிகையில் நடந்த வானொலி நிகழ்ச்சியில்



அடடா! அந்தச் சிறுமிக்குத்தான் எவ்வளவு ஆனந்தம்! கொடுத்து வைத்தவள்.



மாணவர்களாயிருக்கும்போது நேரத்தை வீணாக்கவே கூடாது. நான் மாஸ்கோ போயிருந்தபோது சுவரில் தீட்டப்பட்டிருந்த ஓர் ஓவியத்தைக் கண்டேன். அதில் லெனினும் சில மாணவர்களும் இருந்தார்கள். மாணவர்களைப் பார்த்து லெனின் சொன்ன புத்திமதி அதிலே எழுதப்பட்டிருந்தது. லெனின் சொன்னது என்ன தெரியுமா?

'மாணவர்களாகிய நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் நன்றாகப் படிக்க வேண்டும். இரண்டாவது காரியம் நன்றாகப் படிக்க வேண்டும். மூன்றாவது காரியமும் நன்றாகப் படிக்க வேண்டும்.'

இதிலிருந்து மாணவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பது தெரிகிறதல்லவா?" என்று நேரு கேட்டார்.



## குடைபோலப் பூச்செண்டு!

1952-ல் நேரு சென்னைக்கு வந்திருந்தபோது சுமார் அரை லட்சம் குழந்தைகள் அணிவகுத்து நின்று அவரை வரவேற்றார்கள். வானம் அதிர வாழ்த்துக் கூறினார்கள்.

நேரு காரில் நின்றபடியே ஸ்டேடியத்திற்குள் சுற்றி வந்தார். அங்கு நின்ற குழந்தைகளைக் கண்டு அளவு கடந்து மகிழ்ச்சி அடைந்தார். அவர்களது மலர்ந்த முகங்கள் அவரது மனத்தைக் கவர்ந்தன.

நேரு மேடையில் ஏறியதும், இரண்டு தலைமை ஆசிரியர்கள், மிகப் பெரிய மலர்மாலை ஒன்றைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு மேடைக்குச் சென்றார்கள். நேருவின் கழுத்தில் அந்த மாலையைப் போட்டதும், குழந்தைகள் கை




வீட்டுக்கு வந்த
குழந்தைகளுடன்
விளையாடுகிறார்

முன்னால் வளைகிறாள் ஒரு சிறுமி.

பின்னால் வளைகிறான்
ஒரு சிறுவன்.



தட்டி ஆரவாரம் செய்தார்கள். ஆனால், நேரு மகிழ்ச்சி அடையவில்லை. அவர் முகம் மாறிவிட்டது. 'இவ்வளவு பெரிய மாலை எதற்கு?' என்று அவர் கோபமாய்க் கேட்பதுபோல் இருந்தது.




அப்போது, நான்கு சிறு குழந்தைகள் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய பூச்செண்டைத் தூக்கிக் கொண்டு மேடையில் ஏறினார்கள். பூச்செண்டு என்றால், சாதாரணப் பூச்செண்டா? ஒரு பெரிய குடை போலவே அது இருந்தது! மிகக் கனமாகவும் இருந்தது! அதனால், நாலு பேர் சேர்ந்தும் அதைத் தூக்க முடியவில்லை; தள்ளாடினார்கள்.

நேரு இதைப் பார்த்துவிட்டார். உடனே அவருடைய கோபம் பறந்தது. முகம் மலர்ந்தது. அந்தக் குழந்தைகளை நோக்கி ஓடினார். அவர்களிட மிருந்த பூச் செண்டைத் தம் கையிலே வாங்கினார். குடை பிடிப்பது போல் தோளிலே சாய்த்துப் பிடித்துக்கொண்டார். பெருமையோடும், மகிழ்ச்சி யோடும் இங்கும் அங்குமாக நடந்து வேடிக்கை காட்டினார். அந்தக் காட்சியைக் கண்ட குழந்தைகள் 'ஆ....ஹா....ஹா' என்று ஆனந்தக் கூச்சல் போட்டார்கள்.



### சிறுமி கொடுத்த ரோஜா

சென்னைக் கூட்டத்தில் நேரு பேசப் போகும் சமயத்தில், ஒரு சிறு பெண் அவர் அருகிலே ஓடி னாள். அவளது மலர் போன்ற கைகளிலே ஒரு மலர் இருப்பதை நேரு கண்டார். என்ன மலர்? ரோஜா மலரேதான்! அதை அவள் நேருவிடம் நீட்டிய போது, அவரது முகம் மலர்ந்தது. உடனே அதை




நேரு ஸ்டேடியத்தில் நேரு!

அடேயப்பா!
எவ்வளவு பெரிய
செண்டு!
குடைபோலத் தோளிலே
சாய்த்துக்கொண்டு
நடை போடுகிறார்.



'மனிதருக்குள்
மாணிக்கம்
மக்கள் போற்றும்
தலைவராம்'
என்று பாடி
வரவேற்கிறார்கள்

மகிழ்ச்சியோடு வாங்கித் தமது மேல் அங்கியில் செருகிக் கொண்டார். பிறகு அந்தச் சிறுமியை அன்புடன் தட்டிக் கொடுத்தார்.



அந்தக் காட்சியைக் கண்டு, "ஆஹா! அந்தப் பெண் எவ்வளவு அதிர்ஷ்டசாலி! அவளைப் போல் நம் முதுகிலும் நேரு தட்டிக் கொடுக்கவில்லையே! தட்டிக் கொடுக்காத போனாலும், ஓங்கி இரண்டு அடியாவது கொடுத்திருக்கலாமே! அப்போது எவ்வளவு இன்பமாக இருக்கும்!" என்று எத்தனையோ குழந்தைகள் நினைத்திருப்பார்கள்!

நேரு அந்தக் கூட்டத்தில் பேசுகையில், "நீங்கள் 'பாரத மாதாவுக்கு-ஜே' என்று கோஷம் போடுகிறீர்கள். 'பாரத மாதா' என்றால் என்ன? நீங்கள், நான், நம்மைப் போன்ற கோடிக் கணக்கான மக்கள் ஒன்று சேர்ந்ததுதான் பாரத மாதா. நாம் ஒவ்வொருவரும் இந்தியாவின் ஒரு துண்டு. ஒரு பெரிய பொருளின் சிறு சிறு துண்டுகளாக இருக்கிறோம். ஆனால், எல்லோருமே இந்தியாவின் சமமான துண்டுகள். ஆகையால், நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து நாடு வளம் பெற உழைக்க வேண்டும்" என்று தெளிவாக அவர்கள் மனத்திலே பதியும்படி கூறினார்.



**நோய் பறந்தது!**

டில்லியிலிருந்த அகதிகள் விடுதிக்கு நேரு வந்தார். பாகிஸ்தானிலிருந்து வீட்டைவிட்டு, நிலத்தை விட்டு, சொத்து சுகங்களையெல்லாம் விட்டு இந்தியாவுக்கு ஓடிவந்த பல அகதிகள் அங்கு இருந்தார்கள். அவர்களின் சோகக் கதைகளையெல்லாம் கேட்டு நேரு உள்ளம் உருகினார்.



சென்னை நகரில்
மலர் கொடுத்து
வரவேற்கும் தங்கையும்,



வணக்கம்
செலுத்தி
வரவேற்கும்
தங்கைகளும்.



அப்போது அங்கே ஏழு வயதுச் சிறுவன் ஒருத்தனாக இருந்தான். அவனால் நடக்கவோ, சரியாகப் பேசவோ முடியவில்லை. காரணம், அவனுடைய உடல் மட்டுமல்ல; உள்ளமும் மெலிந்து நொந்து போயிருந்தது. பக்கத்திலிருந்தவர்கள் அவனுடைய கதையை நேருவிடம் கூறினார்கள்.

“இவன் பெயர் கௌசலே. இவனுக்கு அப்பா, அம்மா இல்லை. நினைவு இல்லாமல் தெருவில் விழுந்து கிடந்தானாம். தெருக்கூட்டுகிறவர் ஒருவர் இவனைப் பார்த்திருக்கிறார். முகத்திலே தண்ணீர் தெளித்து, தேநீர் கொடுத்து, இவனை இங்கே தூக்கி வந்து சேர்த்தார். பயத்திலிருந்து உடல் நிலை சரியில்லை” என்றார்கள்.



நேருவை அவன் கதை மிகவும் உருக்கிவிட்டது. அவன் அருகிலே சென்றார். “கௌசலா, கவலைப்படாதே. நாங்களெல்லாரும் உன் உறவினரே. மாதாமாதம் நான் உனக்காக ரூபாய் பதினைந்து அனுப்பி வைக்கிறேன். இந்த வயதில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டாமா?” என்று ஆறுதல் கூறினார்.

நேரு கூறிய இனிய மொழி அவனுக்குச் சிறந்த மருந்தாக இருந்தது. விரைவிலே அவனின் உள்ள நோய் தீர்ந்தது; உடல் நோயும் பறந்துவிட்டது!

## கூட்டத்திலே குல்லாய்!

அலகாபாத்தில் நேரு ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். நேரு பேசுகிறார் என்றால் கூட்டத்திற்குக் கேட்கவேண்டுமா? லட்சக் கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் நடுவிலே




வாய் பேசாது போனாலும்
மனம் பேசுகிறது.
காது கேளாத போனாலும்
கண் கேட்கிறது.

—சென்னையிலுள்ள
வாய் பேசாதவர்,
காது கேளாதவர்களுக்கான
பள்ளிக் குழந்தைகளுடன்


முடக்கு வாதத்தால்
அவதிப்படும் குழந்தையை
அன்போடு கவனிக்கிறார்.





புகுந்து மேடைக்குச் செல்ல விரும்பினான் ஒரு சிறுவன். அவன் கையில் தந்தத்தால் செய்த அழகான ஒரு குல்லாய் இருந்தது. அதை அவன் எப்படியாவது நேருவிடம் சேர்த்துவிட வேண்டுமென்று துடிதுடித்தான். ஆனால், அவனால் அந்தக் கூட்டத்தில் ஓர் அங்குலம்கூட முன்னேற முடியவில்லை.

நல்ல வேளையாகச் சிறிது தூரத்திலிருந்த ஒரு தொண்டர் இதை அறிந்தார். உடனே, அச்சிறுவனை மேடைக்கு அழைத்துச் சென்றார். நேருவின் முன்னே அவனைக் கொண்டுபோய் நிறுத்தினார். விஷயத்தைச் சுருக்கமாகக் கூறினார். உடனே, நேரு அன்போடு, மகிழ்ச்சியோடு அந்தச் சிறுவன் தந்த தந்தக்குல்லாயைத் தம் தங்கக் கையால் பெற்றுக் கொண்டார். அப்போது அவன் கண்களில் இருந்து 'மளமள' வென்று நீர் வழிவதை நேரு கண்டார்.



“ஏனப்பா அழுகிறாய்?” என்று பரிவோடு கேட்டார்.

“நானா? அழுகிறேனா? இது ஆனந்தக் கண்ணீர்!” என்றான் அச்சிறுவன், கண்களைத் துடைத்துக் கொண்டே!

## பாப்பாவுடன் விளையாட்டு


புது டில்லியிலுள்ள குழந்தைகள் சங்கம் வெள்ளி விழா கொண்டாடியது. விழாவிற்கு நேருவை அழைத்திருந்தார்கள். குழந்தைகளின் ஆடல் பாடல்களை நேரு பெரிதும் ரசித்தார். பிறகு, பேசுவதற்கு எழுந்தார். குறைந்தது அரை மணி நேரமாவது அவர் பேசுவார் என்றே



மீனம்பாக்கம்
விமான நிலையத்தில்
குழந்தைகளுடன்

குழந்தைகளின்
குதிரைச் சவாரி
சங்கத்தைக்
கிண்டியில்
துவக்கியபோது





எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், நாலே நிமிஷத்தில் அவர் பேச்சை முடித்துக் கொண்டுவிட்டார்!

மறுவிநாடி, திடீரென்று மேடையிலிருந்து கீழே குதித்தார். அங்கிருந்த ஒரு சிறுமியின் கையைப் பிடித்துக் கொண்டார். "பாப்பா, நாம் விளையாடலாமா?" என்றார். அவ்வளவுதான்; உடனே எல்லாக் குழந்தைகளும் எழுந்துவந்து அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுடன் வேடிக்கையாகச் சிரித்துப் பேசி விளையாடத் தொடங்கிவிட்டார் நேரு! விளையாட்டு மும்முரத்தில் நேரம் போனதே தெரியவில்லை. அரை மணி நேரம் சென்ற பிறகுதான், "அடடே, மணியாகிவிட்டதே!" என்றார் நேரு.



அவருடைய குழந்தை உள்ளத்தைக் கண்டு அன்று வந்திருந்த அயல் நாட்டுத் தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகை நிருபர்கள் எல்லோருமே வியப்படைந்தார்கள்.

"குழந்தைகளுடன் கூடியிருப்பதற்கு, அவர்களுடன் பேசுவதற்கு, எல்லாவற்றையும்விட அவர்களுடன் விளையாடுவதற்கு நான் ஆசைப்படுகிறேன்" என்று ஒரு தடவை நேரு எழுதியிருந்தார்.

"ஆமாம், இது நூற்றுக்கு நூறு உண்மை" என்று கூறுவதுபோல் இருக்கிறதல்லவா மேலே சொன்ன நிகழ்ச்சி?

## தரையிலே உட்கார்ந்தார்


குழந்தைகளுக்கான நாடகம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. நேருவும், சில பெரியவர்களும் சோபாக்களில் உட்கார்ந்திருந்தார்கள். குழந்தைக



இரு சிறுமிகளின்
பின் கழுத்தைப் பிடித்து
வேடிக்கை செய்கிறார்!


தலையைப் பிடித்து
மேலே தூக்குகிறார்!





எல்லாம் தரையில் இருந்தார்கள். நாடகத்தைப் பார்த்துக்கொண்டே இருந்த நேரு, சோபாவை விட்டு மெல்லக் கீழே இறங்கினார். தரையிலே அவரும் குழந்தை போல் சம்மணம் போட்டு உட்கார்ந்துவிட்டார்! அப்போதுதான் அவருக்கு உண்மையான ஆனந்தம் பிறந்தது.

அருகிலிருந்த குழந்தைகளின் கன்னத்தில் தட்டிக் கொடுத்தார். முதுகைத் தடவிக் கொடுத்தார். இடையிடையே சில கேள்விகளும் கேட்டார். அவரைச் சுற்றி உட்கார்ந்திருந்த குழந்தைகளுக்கெல்லாம் அளவில்லாத ஆனந்தம்.



நாடகம் முடிந்ததும், ஒரு சிறுவன், "நேரு மாமா என் பக்கத்தில்தான் இருந்தார். என் முதுகிலே தட்டிக் கொடுத்தார். 'என்ன படிக்கிறாய்? எந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறாய்? என்னென்ன விளையாட்டுக்கள் தெரியும்?' என்றெல்லாம் கேட்டார்." என்று மற்றவர்களிடம் கூறினான். அப்போது அவன் முகத்தைப் பார்க்க வேண்டுமே, என்ன பெருமிதம்!

## நேருவின் ஆசை

குழந்தைகளுக்காக எந்த நல்ல காரியம் செய்தாலும் நேரு அதற்கு ஆதரவு தருவார். நேரம் கிடைத்தால் தாமும் அதில் கலந்து கொள்வார்.


புதுடில்லியில் குழந்தைகள் பூங்காவை அவர் துவக்கிவைத்தார். அப்போது விளையாட்டு ரயில் வண்டி ஒன்று அங்கே விடப்பட்டது. அதில் குழந்தைகளோடு குழந்தையாக நேருவும் ஏறி உட்கார்ந்து சுற்றி வந்தார்.





கிண்டி
குழந்தைகள்
பூங்கா துவக்க
விழாவில்

கலைநிகழ்ச்சி
கண்டு
களிக்கிறார்,
சிறுவனைப்
பாராட்டுகிறார்



கல்வியும் கருத்தையும் கலந்த சுவையான குழந்தைப் புத்தகங்கள், குழந்தைகளுக்கு மகிழ்ச்சியும் அறிவும் ஊட்டக்கூடிய திரைப்படங்கள், குழந்தைகளுக்காகவே தனி நல நிலையங்கள் - இவையெல்லாம் நிறைய நிறைய வேண்டுமென்று நேரு ஆசைப்படுவார். அடிக்கடி இவை பற்றிப் பேசுவார்.

சில இடங்களில், குழந்தைப் புத்தகங்களை வெளியிட்டு நேருவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். இன்னும் சில இடங்களில், அவரது பிறந்த நாளில் குழந்தை நல நிலையங்களைத் துவக்குகிறார்கள்; புதிய பள்ளிக் கூடங்களைத் திறக்கிறார்கள். இப்படி நேருவின் ஆசையைப் பல வழிகளிலும் நிறைவேற்றி வருகிறார்கள்.



**மகளுக்குக் கடிதம்**


நேரு தேச விடுதலைக்காகப் பாடுபட்டபோது, அவரைப் பல முறை சிறையில் அடைத்து வைத்தார்கள். 3262 நாட்கள் (சுமார் ஒன்பது ஆண்டுகள்) சிறையில் இருந்திருக்கிறார். நைனி, டேராடூன், அல்மோரா என்று ஒன்பது இடங்களில் சிறை இருந்திருக்கிறார்.

நேரு சிறையில் இருந்தபோதுதான் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை எழுதினார். தம்முடைய மகள் இந்திராவுக்கு அவர் சிறையிலிருந்து பல கடிதங்கள் எழுதினார். அவற்றில் உலக வரலாற்றை மிக அழகாகவும், எளிமையாகவும் அவர் எழுதியிருக்கிறார்.


அவர் வீட்டில் இருக்கும்போது மகள் இந்திரா அவரை அடிக்கடி கேள்வி கேட்பாள். பல விஷயங்



குடியரசு நாளின் குதூகல வரவேற்பு—
ஒரு சிறுவன் ரோஜா மலர் கொடுக்கிறான்.




ஜாம்ஷெட்பூர் குழந்தைகள் கூட்டத்தில் சிறுமியின் பாட்டை உற்றுக் கேட்கிறார்



களைப் பற்றியும் கேட்பாள். நேரு அன்போடு பதில் கூறுவார். ஆனால், சிறையிலிருக்கும்போது, இந்திரா எப்படிக் கேள்வி கேட்பாள்? இல்லை, நேருதான் எப்படிப் பதில் கூறுவார்? ஆகையால், நேரு சிறையில் இருந்துகொண்டே, இந்திராவுக்குப் பல கடிதங்களை எழுதினார். உலக வரலாறு பற்றியும், பல தேசங்களைப் பற்றியும் அந்தக் கடிதங்களில் அழகாக, விளக்கமாக, எளிமையாக எழுதினார்.

நேரு எழுதிய கடிதங்கள் பல மொழிகளிலும் வெளிவந்திருக்கின்றன. தமிழ்கூட அது வெளிவந்திருக்கிறது. அதை நீங்கள் அவசியம் படிக்க வேண்டும்.

இந்தக் கடிதங்களை நேரு எழுதியபோது இந்திராவுக்கு வயது என்ன, தெரியுமா? பத்தே வயதுதான்!



## சர்வதேசக் குழந்தைகள் போட்டி


டில்லியிலிருந்து 'சங்கர்ஸ் வீக்லி' என்ற ஒரு கேலிச் சித்திரப் பத்திரிகை வெளிவருகிறது. அந்தப் பத்திரிகையில் ஆண்டுதோறும் சிறுவருக்கான போட்டிகள் நடத்துவார்கள். உலகத்திலுள்ள பல தேசக் குழந்தைகளும் அந்தப் போட்டிகளில் கலந்து கொள்வார்கள். சித்திரங்கள் வரைந்து அனுப்புவார்கள். கதை, கட்டுரை, பாட்டு எழுதி அனுப்புவார்கள்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு கிடைக்கும். வயதை அனுசரித்துப் பரிசுகள் கொடுப்பார்கள். ஒவ்வொரு வயதுப் பிரிவிற்கும் ஒரு முதல் பரிசு உண்டு. முதல் பரிசுகள் எல்லாமே




1955ல்
டில்லியில் நடந்த
குழந்தைப் புத்தகக் காட்சியில்
குழந்தைகளுடன் சேர்ந்து
புத்தகம் படிக்கிறார்

1956ல்
சாகித்ய அகாதமி
டில்லியில் நடத்திய
புத்தகக் காட்சியின்
குழந்தைப் பகுதியில்






அகதிகள் முகாமில் உள்ள
ஆரம்பப் பள்ளியில்
பாடப் புத்தகம்
எப்படியிருக்கிறது என்று
படித்துப் பார்க்கிறார்



நேரு மகிழ்ச்சியுடன் பரிசளிப்பார். அந்தப் பரிசு பெற்றவருக்குரிய மெடலை நேருவே கொடுத்துவிடுவார்.

அந்தப் போட்டிக்கு வரும் வண்ண வண்ணச் சித்திரங்களைக் கண்டு நேரு மகிழ்ச்சி அடைவார். குழந்தைகளின் கற்பனைகளைக் கண்டு மனம் பூரிப்பார்.

## குழந்தையைக் காப்பாற்றினார் !




ஒருசமயம் நேரு தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார். கோயம்புத்தூரில் இருந்து கோட்டகிரிக்குப் போனார். வழியில், மலைச் சாலை ஓர் இடத்தில் 'டமார்' என்று கார் டயர் வெடித்தது. நல்ல காலம், எந்த விபத்தும் ஏற்பட வில்லை. கார்தான் நகரவில்லை.

உடனே, நேருவும் காரில் இருந்தவர்களும் கீழே இறங்கினார்கள். அவ்வளவுதான்; சுற்றுப் புறத்தில் இருந்த மக்கள் பெரிய கூட்டமாக அங்கே வந்து கூடிவிட்டார்கள்! அவர்கள் நேருவைப் பார்த்துக் கும்பிட்டார்கள். நேருவும் அவர்களுக்கு வணக்கம் செலுத்தினார்.

சிறிது நேரத்தில், கார் பழுது பார்க்கப்பட்டது. நேரு அங்கு கூடியிருந்த மக்களிடம் விடை பெற்றுக்கொண்டு காரிலே ஏறினார். சிறிது தூரம்கூடக் கார் சென்றிருக்காது. அப்போது, திடீரென்று ஐந்து வயதுப் பெண் ஒருத்தி காரை நோக்கி வெகு வேகமாக ஓடி வந்தாள். காரின் எதிரிலே வந்து விட்டாள். இன்னும் ஒரு விநாடி தாமதித்திருந்தால், அவள் மீது கார் ஏறியிருக்கும். சக்கரத்தில் நசுங்கிச் செத்திருப்பாள். ஆனால், நேரு அப்படி நடக்க விடவில்லை !

'சங்கர்ஸ் வீக்லி' நடத்தும் சர்வதேசக் குழந்தைகள் போட்டியில்




நேருவின் தங்கக் கையால் பரிசு பெறும் தம்பி, தங்கைகள்





வந்திருந்தும் பக்கத்தில் நின்ற அவர் சட்டென்று பிரேக்கைப் போட்டுக் காரை நிறுத்தினார். காரிலிருந்து கீழே குதித்தார். அந்தச் சிறுவனின் அருகிலே சென்றார். அவனைப் பிடித்துத் தூக்கிக் கையிலே தூக்கினார். அங்கு நின்ற அவனுக்கு முத்தம் கொடுத்தார். பிறகு கழுத்திலிருந்த ஒரு மாலையைக் கழற்றி அவன் கழுத்திலே போட்டார். போட்டுவிட்டுச் சிரித்தார். கண்மூடிக் கண் திறப்பதற்குள் இவையெல்லாம் நடந்துவிட்டன... இதைப் பார்த்தவர்கள் எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள். படிப்பவர்களாகிய நாமும்தான் ஆச்சரியப்படுகிறோம். இல்லையா?

## தலைகீழாக நின்றார்!




'என் குழந்தைப் பருவம்' என்ற வரிசையில் அகில இந்திய வானொலியில் ஒரு நிகழ்ச்சியைப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நேரு துவக்கி வைத்தார். அப்போது அவரைப் பார்ப்பதற்காகப் பல குழந்தைகள் வந்திருந்தார்கள். அவர்களுடன் நேரு மிகவும் குதூகலமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அருகில் இருந்த பையனைப் பார்த்து, "தம்பி, நீ பெரியவனானதும் எப்படியிருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறாய்?" என்று கேட்டார் நேரு.

அச்சிறுவன் சிறிதுகூடத் தயங்கவில்லை. "நான் ஜவாஹர்லால் ஆக வேண்டுமென்று ஆசைப் படுகிறேன்." என்றான். இதைக் கேட்டு நேரு சிரித்தார்.

அப்போது ஒரு குழந்தை, "நேரு மாமா, நேரு மாமா, ஒரு பாட்டுப் பாடு மாமா" என்று கெஞ்சிக்


சர்வதேசக்
குழந்தைகள்
போட்டியில்



முதல் பரிசு பெற்ற
சிறுமி
முத்தமும் பெறுகிறள்




பரிசளிப்பு விழாவுக்குத்
தலைமை தாங்கிய
சிறுவனுடன்



கேட்டதும் உடனே எல்லாக் குழந்தைகளும், "பாட்டு, பாட்டு" என்று கூச்சலிட்டனர்.

"நான் வாழ்க்கையில் எல்லாத் தொழில்களையும் செய்திருக்கிறேன். ஆனால், பாடகனாக மட்டும் இருந்ததில்லையே!" என்று கூறி உதட்டைப் பிதுக்கிக்கொண்டே சிரித்தார் நேரு. எல்லோரும் சேர்ந்து சிரித்தார்கள்.

ஆனாலும் சில குழந்தைகள் விடவில்லை. "நேரு மாமா, ஒரே ஒரு பாட்டு" என்று மீண்டும் மீண்டும் கேட்டார்கள்.



நேருவுக்கு அப்போது 'சட்' டென்று ஒரு யோசனை தோன்றியது. "நீங்களெல்லாம் என்னைப் பாடச் சொல்கிறீர்கள். சரி, நான் பாடுகிறேன். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை. நான் பாடுவதற்கு முன்பு நீங்களெல்லாம் நான் செய்வது போலச் செய்ய வேண்டும். என்ன, செய்வீர்களா?" என்று கேட்டார்.

"ஓ....நாங்கள் தயார்" என்றார்கள்.

உடனே நேரு எழுந்தார். "இதோ இப்படிச் செய்யுங்கள்" என்று கூறிவிட்டுத் தலையைத் தரையில் வைத்தார். கால்களை உயரே தூக்கினார். அப்படியே ஆடாமல் அசையாமல் தலை கீழாக நின்றார். தினமும் காலையில் 10 நிமிஷம் சிரசாசனம் செய்வது நேருவின் வழக்கம். ஆகையால் அப்படி நிற்பது நேருவுக்குச் சுலபமாயிருந்தது. ஆனால் அந்தப் பிள்ளைகளால் முடியுமா?

அவர்களில் பலர் அவரைப் போல் தலைகீழாக நிற்க முயற்சி செய்து பார்த்தார்கள். முடியவில்லை. 'தொப், தொப்' பென்று கீழே விழுந்தார்கள்.

"ஐயையோ, தோற்றுப் போய்விட்டீர்களே! என்னைப் போல் செய்ய உங்களால் முடிந்ததா?



'என் செல்லக் கண்ணுக்கு
ஒரு முத்தம்'
காந்திஜி படித்த
ராஜ்கோட் நகரில் நடந்த
காந்திஜி பிறந்தநாள் விழாவில்

எங்கள் மாமா
இனிய மாமா
என்று
கொஞ்சிக் கொண்டாடுகிறாள்
இந்தப் பெண்



பிறகு, நான் எதற்காகப் பாட வேண்டும்? மாட்டேன்" என்று கூறித் தப்பித்துக் கொண்டார் நேரு.

பிறகு நேரு தமது குழந்தைப் பருவத்தைப் பற்றிப் பேசுகையில், "எனக்குக் குருவாக இருந்தவர்கள் எல்லாரும் மிகப் பெரிய மனிதர்கள். ஆனாலும், எல்லோரையும் விடப் பெரியவர் ....." என்று இழுத்தார்.



உடனே, "காந்திஜி, காந்திஜி" என்று பல குரல்கள் ஒரே சமயத்தில் எழுந்தன.

## அர்ஜுனனும் பீமனும்

ஒரு நாள் மாலை நேரம். நேருவைக் காண 13 வயது அமெரிக்கச் சிறுமி ஒருத்தி அவரது மாளிகைக்குச் சென்றிருந்தாள். நேரு அவளை அன்பாக வரவேற்றார். சிறிது நேரம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். அவளுடன் சேர்ந்து சிற்றுண்டி அருந்தினார். பிறகு, "மது...! பெகிடா...!" என்று குரல் கொடுத்தார். உடனே அவர் அன்பாக வளர்த்துவந்த இரண்டு அழகான நாய்கள் அங்கு ஓடிவந்தன. அவற்றை அவர் தட்டிக் கொடுத்தார். சில நிமிஷங்கள் அவற்றுடன் விளையாடினார்.



பிறகு, "இங்கே பீமன், அர்ஜுனன் என்று இரண்டு பேர் இருக்கிறார்கள். நீ அவர்களைப் பார்க்கவில்லையே! வா, காட்டுகிறேன்" என்று கூறி அந்தச் சிறுமியை அழைத்துக்கொண்டு சென்றார். அர்ஜுனனும், பீமனும் யாராக இருக்கும் என்று அவள் யோசித்துக்கொண்டே சென்றபோது, "இதோ பார், இவன்தான் பீமன், இவன்தான் அர்ஜுனன்" என்று கூறி அங்கிருந்த இரண்டு புலிக் குட்டிகளைக் காட்டினார். அவற்றுடன் சிறிது




அன்போடு வளர்த்த
அர்ஜுனனும் பீமனும்



பண்டாவுக்கு
இரை கொடுக்கிறார்



[illegible] அன்போடு [illegible] கொடுக்கிறார்



நேரம் பேசினார். அப்புறம், சிறிது தூரத்திலிருந்த நாலைந்து பிராணிகளைக் காட்டினார். பார்ப்பதற்கு அவை விநோதமாயிருந்தன. பூனை முகமும், கரடி உடலும், நரி வாலும் அந்தப் பிராணிகளுக்கு இருந்தன.

"இவை இமயத்தில் வசிக்கும் பிராணிகள். பண்டா என்று பெயர்" என்றார் நேரு.

நேருவையும், அவரது அன்புக்குரிய பிராணிகளையும் பார்த்ததில் அச்சிறுமிக்கு அளவில்லாத ஆனந்தம். அவள் விடை பெறும்போது, நேரு அவளுக்குத் தாம் எழுதிய 'உலக சரித்திரம்' என்ற புத்தகத்தைப் பரிசாகக் கொடுத்தார். அதனுடன், ஒரு சிறு பொம்மையையும் அவர் பரிசாக வழங்கினார். மகாத்மா காந்தி, அவர் அருகிலே ஒரு வெள்ளாடு, இரண்டு மரங்கள், சுற்றிலும் வேலி, ஒரு சிறு வீடு, அந்த வீட்டுக் கூரை மேல் ஒரு பறவை- இவ்வளவும் அந்தச் சிறு பொம்மைக்குள் அடங்கியிருந்தன!



அச்சிறுமி அமெரிக்கா சென்றதும், நேரு குழந்தைகளிடத்திலும், பிராணிகளிடத்திலும் எவ்வளவு பிரியமாயிருக்கிறார் என்பதை அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் எழுதியிருந்தாள். அதைப் படித்த அமெரிக்கக் குழந்தைகளுக்கு நேருவைக் காண வேண்டும் என்ற ஆசை மேலும் அதிகரித்தது.

## கையெழுத்தும் தேசியமும்

நேரு ஒரு கூட்டத்தில் பேசுவதற்காக வந்தார். காரைவிட்டு இறங்கி மேடையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். அப்போது ஒரு சிறுவன்,

# விளையாட்டுப் பிரியர்



உல்லாசமாக
ஊஞ்சல் ஆடுகிறார்




சிரித்த முகத்துடன்
சிலம்பம் ஆடுகிறார்



மகிழ்வுடன்
கிரிக்கெட் ஆட

மட்டையுடன் நேரு
செல்கிறார்



அவரை நோக்கி ஓடி வந்தான். அவனைப் பார்த்ததும் நேரு அங்கேயே நின்றுவிட்டார்.

சிறுவன் அவரிடம் ஒரு கையெழுத்துப் புத்தகத்தை நீட்டினான். கையெழுத்துப் போடும்படி கேட்டான். நேரு புன்னகையுடன் ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டார். உடனே அவன், அதில் தேதியும் போடும்படி கேட்டான். அவர் தேதியை உருதுவில் எழுதினார்.

"மாமா, ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டுத் தேதியை மட்டும் உருதுவில் போட்டிருக்கிறீர்களே! ஏன்?" என்று சிறுவன் கேட்டான்.

அதற்கு நேரு, 'முதலில் நீ 'ஸைன்' (கையெழுத்து) "போடுங்கள்" என்றாய்; பிறகு, 'தாரீக்' (தேதி) "போடுங்கள்" என்றாய். 'ஸைன்' என்பது ஆங்கிலச் சொல். 'தாரீக்' என்பது உருதுச் சொல். ஆகையால்தான் கையெழுத்தை ஆங்கிலத்திலும், தேதியை உருதுவிலும் போட்டேன்" என்றார்.



உடனே சிறுவன் சிரித்தான். நேருவும் அவனுடன் சேர்ந்து சிரித்தார்.


## சிறுமியின் கூச்சம்

அமெரிக்கா சென்றிருந்தபோது, வாஷிங்டன் நகரில் சில குழந்தைகள் நேருவைச் சந்தித்தார்கள். அவர்கள் எல்லோருமே சின்னஞ்சிறு குழந்தைகள். அவர்களைப் பார்த்ததும் நேருவின் ஆனந்தம் அளவு கடந்துவிட்டது.


ஒரு சிறுமியைத் தூக்கி முதுகிலே வைத்துக் கொண்டார். குதிரை போல் தாவித்தாவிக் குதித்தார். இன்னொரு சிறுவனை மேலே தூக்கி எறிந்து பிடித்தார். உடனே, அங்கிருந்த குழந்தைகள்



லண்டன் புறப்படும் நேரு
குழந்தைகளிடம் விடைபெறுகிறார்.




ஐக்கிய நாடுகள் குழந்தை நலச் சங்கத்தில்,
குழந்தைகளோடு நிற்கிறார்.
ஆண்டு மலரைப் பார்க்கிறார்.



எல்லோரும் நான் முந்தி, நான் முந்தி என்று அவருடன் விளையாடப் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தார்கள்.

ஆனால், ஒரே ஒரு சிறுமிமட்டும் கூச்சப்பட்டுக்கொண்டே நின்றாள். அவளுக்கும் நேருவோடு விளையாட ஆசைதான். அவள் தனியாக ஒதுங்கி நிற்பதை நேரு பார்த்துவிட்டார். சற்றும் எதிர்பாராத சமயத்தில் அவள் அருகில் ஓடினார்; திடீரென்று அவளது காலை வாரிவிட்டார். ஆனால், அவள் கீழே விழுவதற்கு முன்பு, சட்டென்று தாங்கிப் பிடித்தார். கன்னங்கள் இரண்டிலும் மாறி மாறித் தட்டிக் கொடுத்தார். மறு விநாடியே அவளது கூச்சம் பறந்தது. சிறிது நேரத்தில் அவளும் நேருவின் முதுகில் சவாரி செய்யத் தொடங்கிவிட்டாள்!



**விந்தை உலகில்**

'மிக்கி மவுஸ்', 'மூன்று இளம் பன்றிகள்' போன்ற பல கார்ட்டூன் திரைப் படங்களைப் பார்த்திருப்பீர்கள். அவற்றைத் தயாரித்து உலகப் புகழ் பெற்றவர் வால்ட் டிஸ்னி என்ற அமெரிக்கர். அவர் குழந்தைகளுக்காகவே 300 ஏக்கர் பரப்பில் ஒரு நகரம் அமைத்திருக்கிறார். 'டிஸ்னி லாண்ட்' என்பது அதன் பெயர். அது ஓர் அற்புத உலகம். கண்கொள்ளாக் காட்சிகளை அங்கே காணலாம். வேடிக்கைகள், ராட்டினங்கள், வியப்பூட்டும் பல காட்சிகள் எல்லாம் அங்கு உண்டு.

குழந்தைகளுக்கு இப்படி ஒரு நகரம் இருக்கிறது என்றால், நேரு அதைப் பார்க்காமல் இருப்பாரா? 1961-ல் அமெரிக்கா சென்றபோது,




அற்புத உலகில்
அற்புத மனிதர் !

கலிபோர்னியாவில் உள்ள
டிஸ்னி லாண்ட் என்னும்
குழந்தைகள் நகரில்
நேருவும் இந்திராகாந்தியும்

வலது கோடியில் இருப்பவர்
வால்ட் டிஸ்னி.



நியூயார்க்
விமான நிலையத்தில்
சிறுவனின்
வரவேற்பு



நேரு டிஸ்னி லாண்டிற்கும் சென்றிருந்தார். அவர் அங்கே சென்ற நாள் மிகவும் முக்கியமான நாள். நேரு பிறந்த நாள்தான் அது! அதனால், அங்கிருந்த குழந்தைகளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி!

மகிழ்ச்சி மிக்க பிறந்தநாள்
வருக, வருக, வருகவே !


என்று உற்சாகமாகப் பாடி வரவேற்புக் கொடுத்தார்கள். அப்போது குழந்தைகளுடன் சேர்ந்து வால்ட் டிஸ்னியும் பாடிப் பரவசமுற்றார்.

## சிவப்புக் கழுத்துக் குட்டை



1961-ல் நேரு ரஷ்யா சென்றிருந்த சமயம், அவரை அந்நாட்டுக் குழந்தைகள் மிகவும் ஆவலோடு வரவேற்றார்கள். அப்போது அவர் பல முன்னணி இளைஞர் முகாம்களுக்குச் சென்றிருந்தார். அங்கிருந்த சிறு பிள்ளைகளுடன் சேர்ந்து சுற்றினார். ஆடல் பாடல்களில் கலந்து கொண்டார். நேருவிடம் அவர்களுக்கு அளவு கடந்த பாசம் ஏற்பட்டது.


தங்கள் முகாம்களின் சிறப்பு உறுப்பினராக இருக்க வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டார்கள். அவரும் சரி என்றார். உடனே அவர் கழுத்திலே, சிவப்புக் கழுத்துக் குட்டை ஒன்றை அவர்கள் அணிவித்தார்கள். முன்னணி இளைஞர்களுக்கான அடையாளச் சின்னம் அதுதான். நேருவுக்கு அதை அணிவித்தபோது, வெகு நேரம் விடாமல் கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள், ரஷ்யக் குழந்தைகள்.




ரஷ்யச் சிறுவன் நேருஜின் கையிலே மலர்க் கொத்து ஒன்றைக் கொடுக்கிறான்.



ரஷ்யச் சிறுமி சட்டையில் அடையாளச் சின்னம் அணிவிக்கிறான்.




1949ஆம் ஆண்டு. நேருவுக்கு ஒரு கடிதம் வந்தது. அது கனமாக இருந்தது. அதில் பல வண்ணங்களில் ஜப்பான் தேசத் தபால்தலைகள் ஒட்டப்பட்டிருந்தன. நேரு அதைப் பிரித்துப் பார்த்தார். அதில், எங்கள் மிருகக் காட்சி சாலைக்கு ஒரு யானை வேண்டும், தயவுசெய்து அனுப்பி வையுங்கள் என்று அவருக்குக் குழந்தைகள் எழுதியிருந்தார்கள். குழந்தைகள் என்றால், இரண்டா நாலா? 2000 குழந்தைகள் கையெழுத்துப் போட்டு அனுப்பியிருந்தார்கள். எல்லோரும் ஜப்பான் தேசத்துக் குழந்தைகள். இதைத் தவிர தனியாகவும் சில குழந்தைகள் நேருவுக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். அவற்றில் ஒரு சிறுமி எழுதிய கடிதம் இதோ இருக்கிறது. படித்துப் பாருங்கள்.





> டோக்கியோ நகரில் இருந்த மிருகக் காட்சி சாலை யுத்தத்தில் அழிந்துவிட்டது. திரும்பவும் அதற்குப் புத்துயிர் கொடுத்து வருகிறார்கள். இங்குள்ள பட்சிகளையும், மற்றவைகளையும் பார்த்துப் பார்த்து எங்களுக்குச் சலித்துப் போய்விட்டது. ஆதலால், எங்கள் உள்ளத்தைக் கவரக்கூடிய யானையைப் பார்க்க ஆசை ஆசையாக இருக்கிறது. தயவுசெய்து, சீக்கிரம் அனுப்பிவையுங்கள். எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.
>
> அன்புள்ள,
> சுமிகோ கனட்டா

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்பு ஜப்பான் மிருகக் காட்சி சாலைகளில் யானைகள் இருந்தன. ஆனால் அவை யுத்த பீதியில் ஊருக்குள் வந்து நாசம் செய்துவிடுமோ என்று பயந்து, அவைகளைச் சுட்டுக் கொன்றுவிட்டா




நேருவின் முன்னால் ஓர் இந்திரா; பின்னால் ஓர் இந்திரா!
1949ல் ஜப்பான் குழந்தைகளுக்காக அனுப்பிய 'இந்திரா' என்னும் யானையை 1957ல் நேருவும் இந்திராவும் நேரில் சென்று பார்க்கிறார்கள்.

அமெரிக்க மாணவர் அணிவகுப்பில்




நேருவும் மாணவர் போல நிற்கிறார்.



களாம். அதனால்தான் ஜப்பானில் அப்போது ஒரு யானைகூட இல்லாதிருந்தது.

அந்தக் குழந்தைகளின் கடிதத்தைப் பார்த்து விட்டு நேரு சும்மா இருப்பாரா? விரைவில் ஒரு யானைக்குட்டியை அனுப்பி வைக்கிறேன் என்று அந்தக் குழந்தைகளுக்குப் பதில் எழுதினார். அதே போல், மைசூரிலிருந்த பெண் யானைக் குட்டியை ஜப்பானுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். அந்த யானைக்குட்டி மைசூரிலிருந்து ரயில் ஏறி கல்கத்தா சென்றது. கல்கத்தாவிலிருந்து கப்பல்ஏறி ஜப்பானை அடைந்தது. அனுப்பும்போது அந்த அழகான யானைக் குட்டிக்கு ஓர் அழகான பெயரைச் சூட்டினார்கள். இந்திரா—ஆம், நேருவின் புதல்வி பெயரும் அதுதானே!



இந்திரா ஜப்பானை அடைந்ததும் அங்கு ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் கூடி வரவேற்பளித்தனர். இந்திராவைப்பற்றி ஒரு குட்டிப் புத்தகம்கூட வெளியிட்டுவிட்டனர். அந்தச் சமயம் ஜப்பானில் எந்தப் பத்திரிகையைப் பார்த்தாலும் இந்திராவின் புகைப்படம் அச்சாகி இருந்தது. எந்தக் குழந்தையைப் பார்த்தாலும், அதன் கையிலே இந்திராவைப் பற்றிய புத்தகம் இருந்தது.


ஜப்பான் குழந்தைகளுக்கு நேரு இந்திராவை அனுப்பியபோது, "இது நான் அனுப்பும் பரிசல்ல; இந்தியக் குழந்தைகள் அனைவரும் அனுப்பும் அன்புப் பரிசு. அவர்களின் நல்வாழ்த்தையும், அன்பையும் இந்திரா தாங்கி வருகிறாள்" என்று எழுதினார்.

இதே போல் அமெரிக்கா, துருக்கி, ஜெர்மனி, அரேபியா, ஆஸ்திரேலியா, கனடா, ஹாலந்து, ரஷ்யா முதலிய நாடுகளுக்கெல்லாம் யானைக் குட்டிகளை அனுப்பி அந்தத் தேசக் குழந்தைகளையெல்லாம்



(மேலே) ஜப்பானில் மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்கிறாள் ஜப்பானியச் சிறுமி. (கீழே) முதுகிலே குழந்தை; கையிலே மாலை. — ஒரு ஜப்பானியத் தாய் அளிக்கும் வரவேற்பு.





மகிழ்வித்தார். உலகக் குழந்தைகளிடம் நேருஜி கொண்டிருந்த பேரன்புக்கு எடுத்துக்காட்டாக இன்றும் அவை விளங்கி வருகின்றன.

## நேருவுக்கு யானைப் பரிசு

நேருவும், இந்திரா காந்தியும் போலந்து நாட்டுக்குச் சென்றிருந்த சமயம், அந்த நாட்டுப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில்,

நேருஜிக்கு யானைப் பரிசு !

போலந்துக் குழந்தைகள் அளிக்கும் பரிசு !

என்ற செய்தி வெளியாகியிருந்தது.




"என்ன இது! எல்லா நாடுகளுக்கும் நேரு யானை அனுப்புகிறார். இவர்கள் நேருவுக்கே யானை கொடுக்கப் போகிறார்களா! ஏன், இந்தியாவில் யானைப் பஞ்சம் வந்துவிட்டதா? நேரு எப்படி யானையைக் கொண்டு போவார்?" என்ற சந்தேகங்கள் அப்போது யாருக்குமே எழவில்லை. காரணம், அந்தக் குழந்தைகள் கொடுத்தது, உண்மையான யானையை அல்ல; தங்கள் பிஞ்சுக் கரங்களால் தயார் செய்த மர யானையைத்தான் அவர்கள் பரிசாக வழங்குகிறார்கள்.

உண்மை யானையைவிட, அவர்கள் அன்புடன் தயாரித்த அந்த யானையை நேரு பெரிதும் விரும்பினார். இந்தியக் குழந்தைகள் சார்பிலே அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.


## சிறுவர் எழுதிய கடிதங்கள்

நேருவுக்குத் தினந்தோறும் நூற்றுக் கணக்கான



பூட்டான் தேசக்
குழந்தையைப் பார்த்துப்
புன்னகை செய்கிறார்.






கடிதங்கள் வரும். நம் தேசத்தின் பல பகுதிகளில் இருந்தும் வரும்; வெளி நாடுகளிலிருந்தும் வரும்.

அவ்வளவு கடிதங்களையும் படித்துப் பார்க்க நேருவுக்கு நேரம் ஏது ? எல்லாவற்றையும் அவரது உதவியாளர்கள் படித்துப் பார்ப்பார்கள். முக்கியமான கடிதங்களை அவரிடம் காட்டுவார்கள். அவற்றிற்கு என்ன பதில் எழுத வேண்டும் என்று நேரு சொல்லுவார். உதவியாளர்கள் அவர் சொன்னபடி எழுதி, அவர்களே கையெழுத்துப் போட்டு அனுப்புவார்கள். மிக முக்கியமான கடிதங்களில் மட்டும் நேருவே கையெழுத்திட்டு அனுப்புவார்.

அப்படி நேருவே கையெழுத்திட்டுக் குழந்தைகளுக்காகப் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஒரு சிறுவன் எழுதிய கடிதத்தையும், அதற்கு நேரு எழுதிய பதிலையும் இங்கே காணலாம் :




நேரு மாமா அவர்களுக்கு,
வணக்கம்.

எல்லாச் சகோதர சகோதரிகளும் உங்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்து அனுப்புகிறார்கள். என்னுடைய பிறந்த நாள் நவம்பர் 13-ல் வருவதால், அதை எவரும் கொண்டாட மாட்டேன் என்கிறார்கள்.

"நாளைக்கு உனக்குக் கட்டாயம் மிட்டாய் கிடைக்கும். உன் பிறந்த நாளுக்கு எதற்கு மிட்டாய் ?" என்று கேட்கிறார்கள். மாமா, உங்கள் பிறந்த நாளை ஏன் ஒரு நாள் முன்பே (நவம்பர் 13-ல்) கொண்டாடக் கூடாது ?

**சிவசங்கர்**
**12—11—'63.**

அன்புள்ள சிவசங்கருக்கு,

நீ அனுப்பிய வாழ்த்துச் செய்தி கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி. உன்னுடைய இந்த அன்புக்குப் பதில் சொல்வது மிகவும் கடினம்.

புது டில்லி, **ஜவாஹர்லால் நேரு**
15—11—'63.




மாமாவுக்குச் சிற்றுண்டி வழங்குகிறார்கள்
மலையாளச் சிறுமிகள்



ஹோலிப்
பண்டிகையில்

வண்ணப் பொடியை
நீட்டுகிறான்
சின்னஞ் சிறு
பாப்பா.




அமெரிக்கக் குழந்தை ஒன்றும், ரஷ்யக் குழந்தை ஒன்றும் நேருவுக்கு எழுதிய கடிதங்கள் இங்கே இருக்கின்றன. நேரு படித்துப் பார்த்த அந்தக் கடிதங்களை, நீங்களும் படித்துப் பார்க்க வேண்டாமா ?

அன்புள்ள நேருவுக்கு,

நீங்கள் மிகவும் நல்லவர். உங்களுக்குக் கறுப்பு மனிதர், வெள்ளை மனிதர் எல்லோருமே ஒன்றுதான். நான் ஜூனியர் ஸ்கூலில் படிக்கிறேன். டெலிவிஷனில் கென்னடியுடன் உங்களை நான் பார்த்திருக்கிறேன். தலையில் வெள்ளைக் குல்லாயுடனும், நீள அங்கியுடனும் 'ஜம்'மென்று இருந்தீர்கள். உங்களுக்கு எங்கள் எல்லோருடைய குவியல் குவியலான வாழ்த்துக்களை இத்துடன் அனுப்புகிறேன்.

உங்கள் நல்வாழ்த்தை விரும்பும்,

ஜூலி,
கலிபோர்னியா.



நேரு மாமாவுக்கு,

மாஸ்கோவிலிருக்கும் தான்யா எழுதிக்கொண்டது.


நீங்கள் உலகத்தில் போர் ஏற்படாமல் செய்தீர்கள். சமாதானம் உண்டாக வழி காட்டினீர்கள். அதற்காக உலகத்தில் உள்ள எல்லோரும் உங்களுக்கு நன்றி செலுத்துகிறார்கள். உங்களால்தான் சமாதானம் என்ற கப்பல், அபாயகரமான பாறைகளில் மோதிவிடாமல் பத்திரமாகக் கரை சேர்ந்துவிட்டது.

நான் இன்றுவரை நீங்கள் தந்த சிவப்பு ரோஜாவைப் பத்திரமாக வைத்திருக்கிறேன். நான் எப்போதாவது இந்தியாவுக்கு வந்தால், கட்டாயம் உங்களைச் சந்திப்பேன்.

தான்யா,
மாஸ்கோ.


**குழந்தைகளின் கண்ணீர்**

1964, மே 27ஆம் தேதி நேரு மறைந்தார்



மதுரை நகரக் குழந்தைகளுடன் மகிழ்ச்சியோடு விளையாடுகிறார்.
காந்திக் கிராமச் சிறுமி மலர்ந்த முகத்தோடு மலர்ச்செண்டு வழங்குகிறாள்.





அவர் மறைந்ததைக் கேட்டு உலகமே அழுதது. பல நாடுகளிலிருந்தும் நேருவின் மகள் இந்திரா காந்திக்கு அனுதாபக் கடிதங்கள் வந்து குவிந்தன. அவற்றில் பல, குழந்தைகள் எழுதிய கடிதங்கள். மாதிரிக்கு இதோ சில கடிதங்கள் :

"எனக்கு நேரு மாமாவை ரொம்பப் பிடிக்கும். அவர் மிக நல்ல மாமா. அவரை நான் மறக்கவே மாட்டேன்."

"உங்களுக்கு அப்பா போய்விட்டார். இதைக் கேட்டதில் இருந்து எனக்குச் சாப்பாடு செல்லவில்லை. தூக்கமும் வரவில்லை"

"நான் நேரு மாமாவைப் பார்த்ததே இல்லை. சீக்கிரம் பார்க்கலாம் என்று நினைத்தேன். என் ஆசை இனி எப்படி நிறைவேறும்?"

"காந்தித் தாத்தாவை நான் பார்த்ததில்லை. நேரு மாமாவையாவது பார்த்துவிட வேண்டுமென்று ஆசைப் பட்டேன். எனக்குக் கொடுத்து வைக்கவில்லை."




"உங்களுடைய அப்பா எனக்குப் பிடித்தமானவர். எல்லோருக்கும் பிடித்தமானவர். அவர் மிகமிக நல்லவர். தயவு செய்து அழாதீர்கள். இல்லாவிட்டால் நானும் அழுவேன்."

இப்படி உள்ளத்தை உருக்கும் எத்தனை எத்தனையோ கடிதங்கள்.

நேரு மறைந்ததைக் கேட்டதும், ஜப்பான் தேசத்துக் குழந்தைகள் மிகவும் வருத்தப்பட்டார்கள். ஜப்பான் தலை நகரான டோக்கியோவைச் சேர்ந்த சில குழந்தைகள் உடனே ஒன்று கூடினார்கள். நேராக மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்றார்கள். அங்கே, அன்புப் பரிசாக அவர்களுக்கு நேரு அனுப்பி வைத்த யானை இருந்தது. அதைச் சுற்றி வட்டமாக உட்கார்ந்துகொண்டார்கள். சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள். அப்போது அவர்கள் கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்தது.




பரம்பிக்குளம் மலைஜாதிக் குழந்தைகள் மத்தியிலே.



பொன்னாச்சி வந்தபோது பூமாலை போட்ட குழந்தையுடன்.

# ஜவஹர் மாம்பழம்



ராஜ்கோட் நகரில் 'பாலர் பவனம்' என்று ஒன்று இருக்கிறது. அங்கே நேரு 1960-ஆம் ஆண்டு சென்றிருந்தார். அச்சமயம், பாலர் பவனத் தோட்டத்திலே ஒரு மாஞ்செடியை நட்டு வைத்தார். அந்த மாஞ்செடி இப்போது நன்றாக வளர்ந்துவிட்டது. சென்ற ஆண்டு அது பூத்துக் காய்த்துப் பழம் தர ஆரம்பித்தது.

அந்த மாம்பழங்களுக்கு பாலர் பவனக் குழந்தைகள் என்ன பெயர் வைத்தார்கள், தெரியுமா? 'ஜவாஹர் மாம்பழம்.'

ஒரு கூடை நிறைய ஜவாஹர் மாம்பழங்களை அவர்கள் பறித்தார்கள். நேரு உயிரோடு இருந்திருந்தால், அந்த மாம்பழங்களை அவருக்கு அனுப்பி வைத்திருப்பார்கள். அவர் இல்லாததால் அவருடைய மகள் இந்திரா காந்திக்கு அனுப்பி வைத்தார்கள்.



"இத்துடன் ஜவாஹர் மாம்பழங்களை அனுப்பியிருக்கிறோம். நீங்கள் சாப்பிடுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கும் கொடுங்கள்" என்று கடிதமும் எழுதி அனுப்பியிருந்தார்கள்.

நேரு நட்ட செடி, நன்றாக வளர்ந்து, மரமாகி, பூத்துக் காய்த்துக் கனி தருகிறது. அதேபோல், "இன்றையக் குழந்தைகளும் நல்ல முறையில் வளர்ந்து, நல்ல காரியங்களைச் செய்து, நாட்டுக்குப் பயன்பட வேண்டும்" என்பதுதான் நேருவின் ஆசை!



ஆந்திர நாட்டில்

கைக்குள்ளே
என்ன இருக்கிறது?

தோள்மீது
கைபோட்டுத்
தோழர் போல்
நடக்கிறார்.



## அதிர்ஷ்டக் குழந்தைகள்



### எங்கள் வீட்டிற்கு வந்தார்!

பண்டித ஜவாஹர்லால் நேரு 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம், காலஞ்சென்ற என் பாட்டனார் திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்களின் சிலையைத் திறந்து வைப்பதற்காகச் சென்னைக்கு வந்திருந்தார். அப்பொழுது அவர் என் பாட்டியைச் சந்திக்க எங்கள் வீட்டிற்கும் வருவதாகத் தகவல் கிடைத்தது. எனக்கு ஒரே ஆனந்தம். அத்துடன் "நேருஜி என்னிடம் என்ன கேட்பாரோ!" என்ற பயம் வேறு.

"1936—37ல் தேர்தல் பிரசாரத்திற்காகச் சென்னைக்கு வந்தபோது திருவல்லிக்கேணியில் நம் வீட்டில்தான் நேருஜி சில நாட்கள் தங்கியிருந்தார்" என்று என் பாட்டி அடிக்கடி எங்களுக்குக் கூறுவார்.

சரியான சமயத்துக்கு, நேருஜியும், உடன் கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதியும், திரு. காமராஜும் வந்திருந்தார்கள். என் பாட்டியாரும் நாங்களும் அவர்களை வரவேற்றோம். சிரித்தபடியே எங்களுக்கு 'நமஸ்தே' சொல்லிவிட்டு உள்ளே வந்தார். எல்லோரும் உட்கார்ந்தார்கள்.

நேருஜி ஆங்கிலத்திலே பேசினார். அதை என் சகோதரர் மொழி பெயர்த்துச் சொன்னார்.

நேருஜிக்கு 'ரோஜாப் பூ' என்றால் மிகவும் பிரியம் என்பதுதான் தெரியுமே. நாங்கள் பெரு சேர்த்திருந்த பூக்களை ஒரு சிறிய கூடையில் வைத்திருந்தோம். இவை, என் சித்தப்பா அருமையாக வளர்க்கும் தோட்டத்திலிருந்து வந்தவை. ரோஜாப் பூக்கூடையை நான் நேருஜியிடம் கொடுத்தேன். அவர் என்னைத் தட்டிக் கொடுத்து, மலர்ந்த முகத்துடன், "உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

உடனே திரு. காமராஜ், "இவன்தான் சின்ன சத்தியமூர்த்தி. தலைவரின் பெயர் தான் இவனுக்கும்" என்றார்.

நேருஜி ஒரு பெரிய ரோஜாவை எடுத்தார். தம்முடைய கோட்டுப் பையில் வைத்துக்கொண்டார்.

நேருஜி சிறிது காப்பி அருந்தினார். சுமார் 15 நிமிடங்கள் எங்களுடன் இருந்தார். எங்களுக்கும் கைகொடுத்துப் போட்டோ எடுத்துவிட்டு விடை பெற்றுக்கொண்டார்.

"அதற்குள் போய்விட்டாரே!" என்றிருந்தாலும், அவரைத் தனியே சந்திக்க முடிந்ததில் எங்களுக்கெல்லாம் அளவில்லாத ஆனந்தம்!

—கே. சத்தியமூர்த்தி,
சென்னை.



## என் தோளிலே கைபோட்டுப் பேசினார்!

1960-ல் நடந்தது இன்றும் எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. நானும் என் தம்பியும் நேரு மாமாவைப் பார்ப்பதற்குச் சென்றிருந்தோம். காலையில், குறிப்பிட்ட நேரத்தில் அவர் மாளிகைக்குச் சென்றுவிட்டோம்.

சிறிது நேரத்தில், நேரு மாமா மாடியில் இருந்து இறங்கி வந்தார். அவரைப் பார்த்தபோது என் மனம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. என் அருகிலே அவர் வந்ததும், "மாமா, என் அப்பாவை அமெரிக்காவில் பார்த்தீர்களா?" என்று நான் கேட்டேன். அப்போது என் அப்பா அமெரிக்காவில் இருந்தார்.

"ஓ, பார்த்தேனே!" என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னார்.

"எனக்கு ஏதாவது செய்தி கொண்டுவந்திருக்கிறீர்களா?"

"உன்னைச் சந்திக்கப் போகிறேன் என்று தெரிந்திருந்தால், நிறைய நிறையச் செய்தி கொண்டு வந்திருப்பேனே!" இப்படிச் சொல்லிவிட்டு மேலும் சிரித்தார். பிறகு, என் தோளில் கை போட்டுக்கொண்டே சிறிது நேரம் பேசினார்.

அப்போது எத்தனையோ புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. அந்தப் படங்களைப் பார்க்கும் போதெல்லாம், இப்போது எனக்கு ஒரே துக்கமாக இருக்கிறது. எங்களோடு அந்தப் படங்களிலே இருக்கும் நேருஜி இப்போது இல்லை என்பதை என்னால் நம்ப முடியவில்லையே!

அன்புச் சிறுவர்களை விரும்பிய அவர், இன்று தெய்வ லோகத் தோட்டத்திலே ஒரு மலராகிவிட்டார்!

—சேதுரு பாண்டே, புதுடில்லி.



அன்போடு தட்டிக் கொடுத்து ஆசி கூறினார்

நேரு மாமாவின் தந்தை பண்டித மோதிலால் நேருவின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் நாடகங்கள் நடத்த வேண்டுமென்று என் அப்பாவுக்கு அழைப்பு வந்தது. அப்பா தி. க. ஷண்முகம், சித்தப்பா திரு. பகவதி, டி. கே. எஸ். நாடகக் குழுவினர் எல்லோருமாகப் புதுடில்லிக்குப் புறப்பட்டார்கள். நம் இந்தியாவின் தலைநகரான டில்லியைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எங்களுக்கு மட்டும் இருக்காதா, என்ன ? நானும் என் உடன் பிறந்த அண்ணன்மார்கள் கலைவாணன், புகழேந்தி, சித்தப்பா பிள்ளைகள் குமார், மணிவண்ணன் எல்லோருமாகச் சேர்ந்து பிடிவாதம் செய்தோம். பள்ளிக்கூட விடுமுறையல்லவா ? மறுக்க முடியாமல் எங்களையும் புது டில்லிக்குக் கூட்டிச் சென்றார்கள்.

ஒரு நாள் நேரு மாமா 'இராஜராஜ சோழன்' நாடகத்திற்கு வந்தார். மேடை மீதேறி என் அப்பாமார்களுக்கும் நாடகக் குழுவுக்கும் ஆசி கூறினார். நாங்கள் நேரு மாமா பக்கத்தில் நிற்க பாக்கியம் செய்யவில்லையே என்று ஏங்கினோம். நாடகம் முடிந்த மறுநாள் 1961 மே மாதம் 5-ஆம் தேதி குழுவினர் எல்லோரும் நேரு மாமாவின் மாளிகைக்குப் போவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதை அறிந்ததும் எங்களுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. நேரு மாமாவை நேரில் பார்த்து என் வணக்கத்தைச் சொல்ல வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தேன்.

காலை 10 மணி சுமாருக்கு எல்லோரும் நேரு மாமாவின் மாளிகைக்குச் சென்றோம். மாளிகையில் எங்கு பார்த்தாலும் அழகிய சித்திரங்களும் படங்களுமாக இருந்தன. நேரு மாமாவின் கலையுள்ளத்தை அவருடைய மாளிகையே எடுத்துக்காட்டியது.

இன்னும் கொஞ்ச நேரத்தில் நேரு மாமா எங்கள் பக்கத்தில் வரப்போகிறார் என்று எல்லோரும் சொன்னார்கள். நான் மட்டும் நின்றுகொண்டே இருந்தேன். நேரு மாமா வந்தார். எல்லோரும் அமைதியாகக் கை கூப்பிக் கும்பிட்டார்கள். நேரு மாமா அருகில் வந்ததும் நான் தைரியமாக முன்னால் போய் நின்று "நமஸ்தே, நேரு மாமா" என்று கூறினேன். உடனே அவர் என் இரு கன்னங்களையும் அன்போடு தட்டிக்கொடுத்து ஆசி கூறினார். அந்தச் சில வினாடிகளில் எனக்கேற்பட்ட உணர்ச்சியை வார்த்தைகளால் எப்படிச் சொல்ல முடியும் ? அந்த மகத்தான நிகழ்ச்சி அப்படியே என் நெஞ்சில் பசுமையாக நிலைத்திருக்கிறது. அதை நான் வாழ்நாள் முழுதும் மறக்க மாட்டேன்.

— அருள்மொழி, சென்னை-14.

நேரு மாமாவின் தந்தை பண்டித மோதிலால் நேருவின் நூற்றாண்டு கொண்டாட்டத்தில் நாடகங்கள் நடிக்க வேண்டுமென்று என் அப்பாவுக்கு [illegible] வந்தது. அப்பா டி. கே. ஷண்முகம், சித்தப்பா திரு. பகவதி, டி. கே. எஸ். [illegible] குழுவினர் எல்லோருமாகப் பதினைந்து புறப்பட்டார்கள். நம் இந்தியாவின் தலைநகரான டில்லியைப் பார்க்க வேண்டுமென்று ஆவல் எனக்கு [illegible] என்ன? நானும் என் உடன் பிறந்த அண்ணன்மார்கள் கலைவாணன், [illegible] சிற்றப்பா பிள்ளைகள் குமார், மணிவண்ணன் எல்லோருமாகச் சேர்ந்து [illegible] செய்தோம். பள்ளிக்கூட விடுமுறை தானே? மறுக்க முடியாமல் எங்களை [illegible] டில்லிக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஒரு நாள் நேரு மாமா 'இராஜராஜ சோழன்' நாடகத்திற்கு வந்[illegible] [illegible] என் அப்பாமார்களுக்கும் நாடகக் குழுவுக்கும் [illegible] நேரு மாமா பக்கத்தில் நிற்க பாக்கியம் கிடைக்கவில்லையே என்று ஏங்கினேன். [illegible] முடிந்த மறுநாள் 1961 ஜூலை மாதம் 5-ஆம் தேதி குழுவினர் எல்லோருக்கும் [illegible] மாளிகைக்குப் போவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதை அறிந்ததும் [illegible] மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. நேரு மாமாவை நேரில் பார்த்து என் [illegible] சொல்ல வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தேன்.

காலை 10 மணி அளவுக்கு எல்லோரும் நேரு மாமாவின் மாளிகைக்குச் [illegible] றோம். மாளிகையில் எங்கு பார்த்தாலும் [illegible] நேரு மாமாவின் [illegible]

இன்னும் சிறிது நேரத்தில் நேரு மாமா எங்கள் பக்கத்தில் [illegible] என்று எல்லோரும் சொன்னார்கள். நான் [illegible] [illegible]